DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.55/2023

**prosecution witness: LW7 as PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முனியாண்டி | தொழில் | : | சார்பு ஆய்வாளர், |
| த/பெ. | : | ராமு | வயது | : | 57 |
| கிராமம் | : | இராமேஸ்வரம் | சமயம் | : | இந்து |
| தாலுகா | : | இராமேஸ்வரம் | | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>19.06.2025</u>

(1ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்சமயம் இளஞ்செம்பூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.04.2022-ம் தேதி 12.00 மணிக்கு நான் பாம்பன் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது பாம்பன் பிரான்சிஸ் நகரைச் சேர்ந்த இக்னேசியஸ் மெக்கலன் மனைவி பரலோக பெரியநாயகி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினைப் பெற்று அதன் தன்மைக்கேற்றவாறு நிலையக் குற்ற எண்.58/2022 பிரிவுகள்.294(b), 324, 506(2) இதச கீழ் வழக்கு பதிவு செய்தேன்.

புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், இவ்வழக்கை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 24.04.2022-ம் தேதி 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நிக்சன், செல்வராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆகும். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆகும்.

பின்பு சாட்சிகள் பரலோக பெரியநாயகி, இக்னேசியஸ் மெக்கலன், இன்னாசி லியோன், ஜான்பிரிட்டோ, நிக்சன், செல்வராஜ் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றேன்.

அதன்பின்பு வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் 15.09.2022ம் தேதியன்று 18.15 மணிக்கு பாம்பன் பிரான்சிஸ் நகரில் வைத்து எதிரிகள் லயோலா, ஜெயக்குமார் ஆகியோர்களை கைது செய்து நிலையம் கொண்டுவந்து நிலையப்பிணையில் விடுவித்தேன். காயம்பட்ட நபர் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். அன்றைய தினமே எனது விசாரணையை முடித்து எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள். 294(b), 324, 506(2) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:—</u>

புகாரில் புகார்தாரரை வயிற்றில் ஏறி மிதித்தாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 23.04.2022ம் தேதி மாலை 06.00 மணிக்கு புகார்தாரர் எங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. இவ்வழக்கில் காயம்பட்ட இக்னேசியஸ் மெக்கலனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரரின் தாயார் ஜான்பிரிட்டோ சம்பவ இடத்தில் இருந்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

புகார்தாரரின் கணவருடைய மூத்த சகோதரர் தான் 1வது எதிரி என்றால் சரிதான். 2ம் எதிரி புகார்தாரரின் மாமா என்றால் சரிதான். 2ம் எதிரி ஜெயக்குமார் இக்னேசியஸ் மெக்கலன் மீது 23.04.2022ம் தேதி மாலை 04.45 மணியளவில் 1வது எதிரியை தாக்கி இரத்தக்காயம் ஏற்படுத்தியதாக பாம்பன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.87/2022 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இந்த வழக்கின் 1ம் எதிரியை புகார்தாரரின் கணவர் தாக்கி காயம் ஏற்படுத்திவிட்டார் அதனால் 2வது எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் புகார்தாரரின் கணவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட விபரம் தெரிந்து எதிரி இக்னேசியஸ் மெக்கலனை காப்பாற்றுவதற்காக பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இக்னேசியஸ் மெக்கலன் என்பவருக்கு எவ்விதமான காயமும் ஏற்படவில்லை என்றாலும், அதனால் தான் அவர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று சென்றுவிட்டார்.

வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிடாமல் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன தேதியில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ஓம்/—S.B. Sujith, B.A.,B.L.,(Hons)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.